Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**தினத்தளம்**

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 114 | செவ்வாய்க்கிழமை Tuesday | 24.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# இந்தியா முழுக்க பின்பற்றக்கூடிய மாடலாக நம்முடைய திராவிட மாடல் இருக்கிறது

## கொளத்தூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் பூம்புகார் நகரில் இந்து சமய அறநிலையத்துறையின் கபாலீசுவரர் கலை அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து பேசியதாவது:-

"இந்தியா முழுக்க பின்பற்றக்கூடிய மாடலாக நம்முடைய திராவிட மாடல் இருக்கிறது என்றால், அந்த திராவிட மாடல் அரசின் மாடல் தொகுதியாக இருப்பது கொளத்தூர் தொகுதி. எல்லாவகையிலும் தன்னிறைவு பெற்ற தொகுதியாக கொளத்தூரை வளர்த்து எடுத்துள்ளோம்.

ஏதோ தேர்தல் வரும் போது மட்டும் ஒன்று, இரண்டு திட்டங்களை தொடங்கி வைக்கவில்லை. 5 வருடமாக பார்க்கிறீர்கள். ஒவ்வொரு மாதமும் வந்து உங்களுக்கு தேவையான எல்லாவற்றையும் செய்து கொடுத்து கொண்டு வருகிறோம். இங்கு பல்கலைக்கழகம் போன்று கபாலீசுவரர் கல்லூரியை உருவாக்கி உள்ளார் அமைச்சர் பி.கே.சேகர்பாபு. கபாலீசுவரர் கலை அறிவியல் கல்லூரியை உலகத் தரத்தில் உருவாக்கி உள்ளோம்.கல்வி எனும் கடவுள்தான் உங்களுக்கு அனைத்தையும் கொடுக்கும். பெரிய பெரிய திட்டப் பணிகளை தமிழ்நாடு முழுவதும் திறந்து வருகிறேன். தமிழ்நாடு முழுவதும் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒவ்வொரு தொகுதியிலும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி உள்ளோம். மக்களை மையப்படுத்தி மக்களை தேடி வந்து சேவைகளை வழங்குகிற மக்களாட்சியாக திராவிட மாடல் பெயர் எடுத்துள்ளது.

நல்லாட்சி தொடர, நம்ம கொளத்தூர் மேலும், மேலும் உயர, உங்களுடைய ஆதரவு என்றும் எங்களுக்கு இருக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், மேயர் ப்ரியா உள்பட பலர் கலந்துகொண்டனர். மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோவில்கள் சார்பில் கொளத்தூர், திருச்செங்கோடு, விளாத்தி குளம், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் 4 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. சென்னை, கொளத்தூர் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்கி வைத்ததோடு மட்டுமல்லாமல், அக்கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஒவ்வொரு கல்வியாண்டிலும் கல்விக்கட்டணமாகரூ.10,000 மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை வழங்கி வருகின்றார். இக்கல்லூரியில் B.Com., BBA, BCA, B.Sc. Computer Science, . . (Saiva Siddhanta) பட்டப்படிப்புகளும், சைவ சித்தாந்தம் பட்டயப்படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன. தற்போது இக்கல்லூரியில் 765 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு கொளத்தூர், பூம்புகார் நகரில் 5.96 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 31 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் புதிய கல்லூரி கட்டடம் கட்டுவதற்கு 23.12.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயின்ற 516 மாணவ, மாணவியர் வளாக நேர்காணல் (Campus Interview) மூலம் பல்வேறு முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த.வெ.க. ஆட்சியில் பேருந்து வசதி இல்லாத கிராமங்களே இருக்காது; வேலூரில் விஜய் அறிவித்த வாக்குறுதிகள்



வேலூர்: எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தல் ஸ்டாலின் சாருக்கும் தமக்கும் இடையேயான போர் என்று தவெக தலைவர் விஜய் பகிரங்கமாக பிரகடனப்படுத்தி உள்ளார். தவெக நிர்வாகிகள் உடனான ஆலோசனை மற்றும் தேர்தல் பரப்புரை கூட்டம் வேலூரில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் விஜய் பங்கேற்று பேசினார். தமது தேர்தல் பரப்புரைகளில் ஆளும் திமுகவை விமர்சித்து பேசும் அதே பாணியை தான் வேலூரிலும் அவர் கடைபிடித்தார்.

குட்டிக் கதையுடன் தமது பேச்சை ஆரம்பித்த தவெக தலைவர் விஜய், "ஒரு ஊரின் நாலு ரோடு ஜங்ஷன் பகுதியில் முரட்டுக்காளை ஒன்று நிற்கிறது. பரபரப்பான அந்த சாலையின் நடுவே நின்று கொண்டிருந்த அந்த காளையின் பக்கத்தில் யாரும் போக முடியவில்லை. அந்த ஊரில் உள்ள ஒரு சில பேருக்கு மட்டும் தான் அந்த காளை அடங்கும். ஆனால் அவர்கள் ஊரில் இல்லை. அந்த நபர்களுடன் இருந்த பெரியவர்கள் சிலர் எங்களுக்கு இல்லாத அனுபவமா? என காளையை அடக்கச் செல்கின்றனர். அந்த காளை அவர்களை அருகில் கூட வரவிடவில்லை. அப்போது ஒரு சிறுவன் என்ட்ரி தருகிறான். அவன் அதன் அருகில் செல்கிறான். அந்த காளை ஆக்ரோஷமாக் சீறி வந்த போது புல் கட்டுகளை எடுத்து நீட்டுகிறான். அந்த காளை அதனை பெற்றுக் கொண்டு அமைதியாக செல்கிறது. அப்போது அந்த சிறுவனிடம ஒரு பெரியவர் எப்படி காளை அமைதியாக சென்றது? என கேட்டார். அதற்கு அந்த சிறுவன் காளை பசியுடன் இருந்தது; அதனிடம் கோபம் இல்லை" என கூறினான்.

இந்த கதையில் வரும் முரட்டுக்காளை தான் தமிழக அரசியல் களம், அந்த சிறுவனிடம் கேட்ட பெரியவர் தான் மக்கள். ஸ்டைலா, கெத்தா வந்த சிறுவன் நான் இல்லை, நம்ம தவெக கட்சி என்று விஜய் கூறவே ஒட்டுமொத்த மைதானமும் கரகோஷத்தில் அதிர்ந்தது.

மக்கள் கடந்த தேர்தலில் சரியான தலைமை இல்லாமல் ஸ்டாலின் சார் கொடுத்த பொய்யான வாக்குறுதிகளால் அவருக்கு வாக்களித்தனர். அந்த நேரத்தில் வெகுஜன மக்கள் இயக்கமாக வந்ததுதான் தவெக. நாம் ஒவ்வொரு வீட்டிலும் உயிராகவும், உணர்வாகவும் இருக்கிறோம். எனக்கு மக்களை அவர்களது ஊருக்கு, வீட்டிற்கு சென்று சந்திக்க வேண்டும் என்பது தான் ஆசை. ஆனால் ஒரு எதிர்கட்சியாக இருந்து கேள்வி கேட்கும் இந்த நேரத்தில் நமக்கு எதிராக என்னென்ன சூழ்ச்சிகள் எல்லாம் நடக்கிறது என உங்களுக்கு தெரியும். தவெக ஆட்சி அமைந்தவுடன் கண்டிப்பாக ஒவ்வொரு கிராமத்தி ற்கும் வந்து மக்களை சந்திப்பேன்.

இது தமிழ்நாட்டிற்கும் டெல்லிக்கும் நடக்கும் தேர்தல் என முதலமைச்சர் ஸ்டாலின் மற்றொருஉருட்டுஉருட்டுகிறார். இது என்ன நாடாளுமன்ற தேர்தலா? இது தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழல் சக்திகளுக்குமான போர், தமிழ்நாட்டு மக்களுக்கும் லஞ்சத்திற்குமான போர், இந்த விஜய்க்கும், ஸ்டாலின் சாருக்குமான போர், திமுக - தவெக இடையே நடக்கும் போர்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்த திமுக அரசு சூப்பர் ஸ்டாண்ட் அப் காமெடி அரசு. இதுவரை நடைபெற்ற தேர்தல் வேறு, இந்த முறை நடக்கும் தேர்தல் வேறு. இம்முறை நடப்பது, 50 வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் அதிசய தேர்தல். இந்த தேர்தலில் ஒட்டு மொத்தமாக மக்கள் என்னோடு நிற்கின்றனர். அந்த கடுப்பில் தான் என்னை எதிர்க்கின்றனர். உங்கள் (தமிழக மக்கள்) ஒட்டு விசில் சின்னத்திற்கு தான் என எல்லோருக்கும் தெரியும். இது எதிரிகளுக்கும் தெரியும், அதனால்தான் வேண்டுமென்றே எனக்கு எதிராக அவதூறு பரப்புகின்றனர். என்மேல் அவதூறு பரப்பினால் மக்கள் மீது அவதூறு பரப்புவதற்கு சமம். இந்த விஜயும், மக்களும் ரத்தமும், சதையும் மாதிரி. உடலும் உயிரும் மாதிரி, நம்மை பிரிக்கவே முடியாது" என உணர்ச்சி ததும்ப பேசினார்.

# இறுதி வாக்காளர் பட்டியல்; தமிழ்நாட்டில் 5.67 கோடி வாக்காளர்கள் உள்ளனர்

## 74 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கம்




தமிழகத்தில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் இருப்பதாக, மாநில தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025-ல் தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 6.41 கோடியாக இருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 5.67 கோடியாக குறைந்துள்ளதால், சமீபத்திய எஸ்ஐஆர் நடவடிக்கை மூலம் தமிழகத்தில் நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை 74 லட்சமாக உள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு "27.10.2025 தேதியின் நிலவரப்படி, 6,41,14,587 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். சிறப்பு தீவிர திருத்தம் 2026-இன் கீழ் கணக்கெடுப்பு கட்டம் முடிந்த பிறகு, மொத்தம் 5,43,76,756 வாக்காளர்களின் பெயர்களைக் கொண்ட வரைவு பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

19.12.2025 முதல் 30.01.2026 வரையிலான ஏற்புரைகள் மற்றும் மறுரைப்புரைகளுக்கான காலத்தில், 27.53 லட்சம் தகுதியுள்ள வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் 4.23 லட்சம் தகுதிபெறாத நபர்கள் நீக்கப்பட்டனர். அதன்படி, தகுதியுள்ள வாக்காளர்களைக் கொண்ட 2026-ன் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அந்தப் பட்டியலில், தமிழகத்தில் மொத்தம் 5,67,07,380 வாக்காளர்கள் உள்ளனர். அதில், ஆண் வாக்காளர்கள் 2,77,38,925, பெண் வாக்காளர்கள் - 2,89,60,838 மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 7,617 நபர்கள் உள்ளனர்.

இன்றைய நிலவரப்படி, இதில் 18-19 வயதுக்குட்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 12.51 லட்சம், மாற்றுத் திறனாளிகள் எனக் குறிக்கப்பட்ட வாக்காளர்கள் 4.63 லட்சம் மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் வாக்காளர்கள் (85+ வயதினர்) 3.99 லட்சம் ஆகும்.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியலின்படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட 27-சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 5,36,991 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,62,621; பெண்கள் 2,74,254; மூன்றாம் பாலினத்தவர் 116).

இதற்கு அடுத்தப்படியாக திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட 6-ஆவடி சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 4,28,772 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,09,662 பெண்கள் 2,19,035; மூன்றாம் பாலினத்தவர் 75) உள்ளனர். தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 18-துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,16,896 ஆவர். (ஆண்கள் 58,221; பெண்கள் 58,620; மூன்றாம் பாலினத்தவர் 55).

இதற்கு அடுத்தப்படியாக இரண்டாமிடத்தில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16-எழும்பூர் சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,34,879 ஆவர் (ஆண்கள் 65,677, பெண்கள் 69,149: மூன்றாம் பாலினத்தவர் 53).

வாக்காளர் பட்டியலினை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான https://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம். அதில் வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சரிபார்த்துக் கொள்ளலாம். வாக்காளர் பதிவு அலுவலரின் முடிவுக்கு எதிரான மேல்முறையீட்டை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 பிரிவு 24(a) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960-இன் விதி 27 இன் கீழ் 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம். முதல் மேல்முறையீட்டு தீர்ப்பில் அதிருப்தி அடைந்தால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். 1950 பிரிவு 24(b) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960-இன் விதி 27-ன்படி மாவட்ட ஆட்சியரின் உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தலைமை தேர்தல் அதிகாரியிடம் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

வாக்காளர்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்து, தேவையானால் பெயர் சேர்க்க (படிவம்-6), திருத்தம் (படிவம்-8) அல்லது நீக்கம் (படிவம்-7) செய்வதற்கான விண்ணப்பங்களை இணையம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவன கோவை கிளை புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதவியேற்பு விழா

## 2026ம் ஆண்டிற்கான திட்ட அறிக்கையை வெளியிட்டனர்

இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் கோவை கிளைக்குபுதியநிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதவியேற்பு விழா கோவை துடியலூரில் உள்ள ஐ சி ஏ ஐ பவனில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 2026 – 2027 ஆம் ஆண்டுக்கான தலைவராக சிஏ சர்வஜித் எஸ் கிருஷ்ணன் பதவியேற்றுக் கொண்டார்.




இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் கோவை கிளைக்கு ஒவ்வொரு ஆண்டு புதிய தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதேபோல் 2026ம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பதவியேற்பு விழா கோவை துடியலூரில் உள்ள ஐ சி ஏ ஐ பவனில் நடைபெற்றது. சிறப்பு விருந்தி னர்கள் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிப்பட்ட இந்நிகழ்வில் 2025ஆம் ஆண்டின் தலைவர் சிஏ ஆர் சதீஷ் அனைவரையும் வரவேற்று பேசினார். இதில் கடந்த ஆண்டின் சாதனைகளை பகிர்ந்து கொண்டதோடு ஐ சி ஏ ஐ யின் கோவை கிளை தென்னிந்திய அளவில் சிறந்த கிளையாக தேர்வாகியிருக்கிறது என்பதனையும் தெரிவித்தார். சிஏ கே முத்துக்குமார் தலைமையில் இயங்கிய கோவை கிளையின் சிஏ மாணவர்கள் அமைப்பிற்கும் 2025ஆம் ஆண்டிற்கான விருது கிடைத்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

விழாவின் தலைமை விருந்தினராக கோவை கிருஷ்ணா ஸ்வீட்ஸின் தலைவர் எம் கிருஷ்ணன், ஐ சி ஏ ஐ யின் முன்னாள் தலைவர் சிஏ ஜி இராமசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக சிஏ கே ஜலபதி, சிஏ வி கோபாலகிருஷ்ணன், ஐசிஏஐயின் தென்மண்டல உறுப்பினர்கள் சிஏ ஏ வி அருண் மற்றும் சிஏ எஸ் இராஜேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ஐ சி ஏ ஐ யின் கோவை கிளைக்கு 2026 – 2027 ஆம் ஆண்டுக்கான தலைவராக சிஏ சர்வஜித் எஸ் கிருஷ்ணன் பதவியேற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து துணைத் தலைவராக சி ஏ தங்கவேல், செயலாளராக சிஏ லக்ஷ்மி, பொருளாளராக சிஏ கே முத்துக்குமார், மாணவர் அமைப்பு தலைவராக சிஏ ஹரிஷ்குமார் மற்றும் உறுப்பினர் சிஏ என் பிரவீன் குமார் உள்ளிட்ட பிற நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பதவி ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து புதிய தலைவர் மற்றும் பிற நிர்வாக குழு உறுப்பினர்க்கு பதவி ஏற்பு மற்றும் ரகசிய காப்பு பிரமாணம் செய்து வைக்கப்பட்டு உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

தலைவராக பதவியேற்ற சிஏ சர்வஜித் எஸ் கிருஷ்ணன் அனைவருக்கும் நன்றி தெரிவித்து 2026ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களையும், இலக்குகளையும் பகிர்ந்து கொண்டு அதற்கான திட்ட அறிக்கையை வெளியிட்டார். வாழ்த்தி பேசிய சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் கோவை கிளையின் வளர்ச்சிக்கும் சிஏ சர்வஜித் எஸ் கிருஷ்ணனின் பங்களிப்பிற்கும் துணை நிற்பதாக தெரிவித்தனர்.

மூத்த பட்டயக் கணக்காளர்கள், ஆசிரியர்கள், சிஏ மாணவர்கள் மற்றும் பலர் பெருந்திரளாக கலந்து கொண்ட விழாவின் முடிவில் ஐ சி ஏ ஐ யின் கோவை கிளைச் செயலாளர் சிஏ லக்ஷ்மி நன்றியுரையாற்றினார்.

முன்னதாக கடந்த ஆண்டு சிறப்பாக பணியாற்றிய நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு முன்னாள் தலைவர்சிஏஆர்சதீஷ்நினைவு பரிசுகள் வழங்கி கவுரவித்தார்.



# பெரிய தடாகம் ஸ்ரீ லலிதாம்பிகை ஆலயம் மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா

கோவை பெரிய தடாகம் ஸ்ரீ லலிதாம்பிகை ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. யாகசாலையில் நான்கு கால யாகங்கள் நடத்தி கோவில் கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் சுற்றுப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அனைவருக்கும் மகா அன்னதானம் நடைபெற்றது.

கோவை பெரிய தடாகம், அனுவாவிசுப்பிரமணியர் கோவில் அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது.

ஸ்ரீ லலிதாம்பிகை ஆலயம். வெள்ளி விழா காணும் இந்த ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு பிறகு கோவில் புணரமைக்கப்பட்டு புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா ஸ்ரீ லலிதாம்பிகை அறக்கட்டளை நிறுவனர் சுவாமி ஜகதாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் தலைமையில் விமர்சையாக நடைபெற்றது.

மஹா கணபதி ஹோமத்துடன் புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா நிகழ்ச்சி தொடங்கியது. தொடர்ந்து முளைப்பாரி மற்றும் தீர்த்தக்குடம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து முதற்கால வேல்வி, இரண்டாம்காலவேள்வி, மூன்றாம் கால வேள்விகள் நடைபெற்றது.

இன்று 108 மூலிகைகளைக் கொண்டு நான்காம் கால வேள்வி நடைபெற்று புனித நீர் கலசங்கள் கோவிலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. அதைத் தொடர்ந்து கோவில் கோபுர கலசங்கள் மற்றும் கோவிலில் அமைந்துள்ள பரிவார தெய்வங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து அருள்மிகுஸ்ரீ லலிதாம்பிகை அம்மனுக்கு புனித நீர் ஊற்றி சிறப்பு அலங்கார பூஜைகள் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் புனித நீர் தெளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து அனைவருக்கும் மகா அன்னதானம் வழங்கப்பட்டது. முன்னதாக கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த சாதுக்களுக்கு ஸ்ரீ லலிதாம்பிகை அறக்கட்டளை நிறுவனர் சுவாமி ஜகதாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் மாலை அணிவித்து மரியாதை வழங்கி வரவேற்றார். இவ்விழாவிற்காக ஏற்பாடுகளை ஸ்ரீ லலிதாம்பிகை அறக்கட்டளை நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# சிவகங்கை மாவட்டத்தொல்லியல் என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் தொல்லியல் மரபு மன்றத்தின் சார்பாக "சிவகங்கை மாவட்டத் தொல்லியல்" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்துகருத்தரங்கைத்துவக்கிவைத்தார்.வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர் பேகம்



வரவேற்புரை ஆற்றினார்.வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் வேலாயுத ராஜா சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்தார்.சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழகத் தொல்லியல் துறை மேனாள்உதவி இயக்குநர் முனைவர் சாந்தலிங்கம் "சிவகங்கை மாவட்டத் தொல்லியல்" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் கூறுகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதமிழிக்கல்வெட்டுகள் சிவகங்கைமாவட்டத்தில் இரண்டு இடங்களில் காணப்படுகின்றன. இதன்மூலம் இம்மக்கள் கல்வியறிவுபெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றும், இங்கு காணப்படும் குடைவரைக் கோயில்களும், முற்காலப் பாண்டியர்களின் கட்டுமானக் கோயில்களும் மிகத் தொன்மையானவை என்றும், அதுபோல தமிழக வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியது களப்பிரர் கால பூலாங்குறிச்சிக் கல்வெட்டென்றும் எடுத்துரைத்தார். அதன்பின் "தொல்லியல் தேடல்களில் கல்லூரி மாணவர்களின் பங்கு" என்ற தலைப்பில் திருப்புல்லாணி சுரேஷ் சுதா அழகன் நினைவு அரசு மேல்நிலைப்பள்ளி தொன்மை பாதுகாப்பு மன்றச் செயலாளர் ராஜகுரு கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் கூறுகையில், தொல்லியல் மரபு மன்றத்தின் மூலம் தொல்லியல் கற்றுக்கொண்டமாணவர்கள்தங்கள் ஊர்பகுதிகளில் உள்ள தொல்லியல் சார்ந்தவற்றை தேடி ஆவணப்படுத்த வேண்டும் என்றும் தொல்லியல் தேடலுக்கு ஆதாரமான கருப்பு சிவப்பு பானை ஓடுகள், சீன ரோமானியபானைஓடுகள்,வட்டச்சில்லுகள்,இரும்பு தாதுக்கள்,கசடுகள் போன்றவற்றை காட்டி அவற்றை கண்டறியும்விதம்பற்றிக்கூறினார்.கணினிஅறிவியல் துறைத் தலைவர் முனைவர் சந்திரசேகரன் வாழ்த்துரை வழங்கினார். இக் கருத்தரங்கில் இடம்பெற்ற தொல்லியல் பொருட்களின் கண்காட்சியை மாணவ மாணவிகள் பார்வையிட்டனர்.வரலாற்றுத்துறைகௌரவவிரிவுரையாளர் முனைவர் தங்கராஜ் நன்றி கூறினார். இதில் பேராசிரியர்களும், ஆசிரியரல்லாப் பணியாளர்களும் மற்றும் மாணவ மாணவியரும், கலந்து கொண்டனர்.

சுட்டி குழந்தைகளின் பல்வேறு திறமைகளை வெளிகொண்டு வந்த

# லிட்டில் மீ பிளே க்ரூப் மற்றும் நர்சரி பள்ளி நடனத்தில் அரங்கை தெரிக்கவிட்ட சுட்டி குழந்தைகள்

## பாராட்டுக்களையும் பரிசுகளையும் அள்ளி சென்ற சுட்டி வாண்டுகள்



சென்னை பூந்தமல்லி அடுத்த குத்தம்பாக்கம் பகுதியில், லிட்டில் மீ ப்ளே க்ரூப் மற்றும் நர்சரிபள்ளிகடந்த4ஆண்டுகாக இயங்கி வருகிறது. இங்கு ப்ளே க்ருப், ப்ரிகேஜி,ஜுனியர்கேஜி, சீனியர் கேஜி பிரிவுகளில், 50க்கும் மேற்பட்ட சுட்டி குழந்தைகள், தங்களது தொடக்க கல்வியை கற்று வருகின்றனர். குட்டி குழந்தைகளின் சுட்டி தனத்தை வெளிபடுத்தும் வகையில், பள்ளியின் ஆண்டுவிழா குத்தம்பா க்கம் பகுதியில் உள்ள,ரோமாபாரடைஸ் அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு,பள்ளியின் தலைமை ஆசிரியர் மோனோலிசா தலைமை தாங்கி பள்ளியில்,கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், மற்றும் நிகழ்வுகளை எடுத்து கூறி,பள்ளியின் ஆண்டறிக்கையை வாசித்து, விழாவை துவக்கி வைத்தார். தொடர்ந்து விழாவில் சிறப்பு விருந்தின ர்களாக கலந்து கொண்ட டீம் எஜுகேஷனல் இன்ஸ்டட்டியூஷன் நிறுவனத்தின் இணை நிருவனர்களான அனாஸ்டெபி, மற்றும் பெலிக்ஸ் மைக்கேல் ஆகியோர், குத்துவிள க்கேற்றிவைத்துஆண்டு விழாவை துவக்கி வைத்து, பள்ளியில் நடைபெற்ற பல்வேறு திறன் வெளிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற குழந்தைகளுக்கும், குழந்தைகளின் பெற்றோர்களுக்கும், சான்றிதழ்கள்,பரிசுகள்,மற்றும் மெடல்கள் வழங்கி பெருமை படுத்தினார். தொடர்ந்து குழந்தைகளின் பெற்றோர்களுக்காக நடத்த பட்ட உணவு திருவிழாபோட்டி,கோல போட்டி, குழந்தை களுக்கான பேன்ஸி ட்ரெஸ் போட்டி, குழந்தைக்களுக்கான தனித்திறன் போட்டிகள் என அனைத்திலும் கலந்து கொண்ட குழந்தைகள், குழந்தைகளின் பெற்றோர்களுக்கு, பாராட்டுக்களும் பரிசுகளும் வழங்கபட்டது. தொடர்ந்து நடைபெற்ற சுட்டி குழந்தைகளு க்கான நடன நிகழ்ச்சி யில் குழந்தைகளின் நடனங்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தோடு, அரங்கத்தை அதிர செய்தது. இதனை குழந்தைகளின் பெற்றோர்கள் பள்ளியின் ஆசிரியர்கள் என அனைவரும் உற்ச்சாக படுத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தொடர்ச்சியாக நடைபெற்ற சுட்டி குழந்தைகளின் நடனம், அனைவரின் மகிழ்ச்சியையும் இரட்டிப்பாக்கியதுடன் அதனை வெளிபடுத்த ஊக்கப்படுத்திய பள்ளி நிர்வாகத்திற்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



எம் யுவராஜா மாநில பொதுச் செயலாளர் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மருத்துவ மாணவர்களுக்கான நீட் நுழைவுத் தேர்வு கையேடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கு பெற்று பயன் பெற்றார்கள். இந்த நிகழ்ச்சியில் தமிழ் மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு எம் யுவராஜா அவர்கள் தலைமையேற்று புத்தகங்களை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினர்களாக மாநில செயற்குழு உறுப்பினர் திரு எஸ் டி சந்திரசேகர் மூத்த துணைத் தலைவர் திரு விடியல் எஸ். சேகர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மேலும் தமிழ் மாநில காங்கிரஸ் ஈரோடு மத்திய மாவட்ட இளைஞரணி தலைவர் திரு கே ரமேஷ் துணைத் தலைவர் திரு மாயா வெங்கடேஷ் மற்றும் நிர்வாகிகள் அருண்குமார் மூத்த நிர்வாகிகள் சம்பத் வட்டாரத் தலைவர் புவனேஷ் உழவன் பிரகாஷ் சரவணன் சாரதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் மாநிலம் முழுவதும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தில் பணி செய்ய க்கூடிய கிராம உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் வழங்கும் கோரி கருப்பு பேட்ச் அணிந்து காத்திருப்பு போராட்டம்

# சத்தியமங்கலம் அருகே யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு



ஈரோடு: சத்தியமங்கலம் அருகே அறுவடையான மக்காச்சோளத்திற்கு இரவு நேர காவலுக்கு சென்ற விவசாயி, யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சத்தியமங்கலத்தை அடுத்த கேர்மாளம் மலைப் பகுதி கேபிமூலம் பகுதியைச் சேர்ந்தவர் மாதேசாமி (65). தற்போது இந்த பகுதியில் மக்காச்சோளம் அறுவடை நடைபெற்று வருவதால், மக்காச்சோளத்தை அங்குள்ள காட்டில் சேமித்து வைத்துள்ளனர். இந்த நிலையில் இரவு நேரத்தில் காட்டுப் பன்றிகள், யானைகள் அந்த மக்காச்சோளத்தை சேதப்படுத்துவதால் மாதேசாமி உடப்ட 10-க்கும் மேற்பட் விவசாயிகள் இரவு நேர காவலில் ஈடுபட்டு வன விலங்குகளை விரட்டி வந்தனர்.

இந்த நிலையில் விவசாயி மாதேசாமி வழக்கம் போல நேற்றிரவு அறுவடையான மக்காச்சோள களத்தில் இரவுநேரகாவல்பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது காட்டுக்குள் இருந்து ஊருக்குள் வந்த காட்டு யானை ஒன்று மக்காச்சோளக் கதிர்களை சாப்பிட முயற்சித்த போது,விவசாயி மாதேசாமி அந்த யானையை விரட்டியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த யானை, அவரை துரத்திச் சென்று தாக்கியதில் மாதேசாமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உடனடியாக அக்கம்பக்கத்தினர் மாதேசாமியை மீட்டு, வனத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

# கதர் தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி

ஈரோடு மாவட்டம் புஞ்சைபுளியம்பட்டி அகில இந்திய விஸ்வகர்ம பேரவையின் கதர் தொழில் மேம்பாட்டு அமைப்பான கே வி ஐ சியும் இணைந்து நடத்தும் 15 நாள் கதர் தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெண்களுக்கு இலவச தையல் தொழில் பயிற்சி இன்று துவங்கியுள்ளது வருகிற மார்ச் 11ஆம் தேதி வரை பயிற்சி பெண்களுக்கு நடைபெற இருக்கிறது எனவும் இதில் தையல் கலைஞர்களுக்குதையல் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்பட உள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது துவக்க விழாவில்புஞ்சைபுளியம்பட்டி காதி கிராமோதிய சங்கத்தின் தலைவர் பழனிச்சாமி செயலாளர் வேலுமணி சத்தியமங்கலம் மகாத்மா காந்தி தையல் பயிற்சி நிலைய நிறுவனர் பாரி ராஜா ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்மா பேரவையின் தலைவர் ஆர்.ஈஸ்வரமூர்த்தி, மாவட்டசெயலாளர்ஆர். மூர்த்தி, மாவட்ட பொருளாளர் சங்கர் துணைத் தலைவர் இளங்கோவன் திருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி விழாவை தொடங்கினர் .மகாத்மா காந்தி படத்திற்கும் விஸ்வகர்மா தெய்வத்திற்கும் பெண்கள் வழிபாடு செய்து தையல் பயிற்சியை துவங்கினர்.





ஈரோடு மாநகர் முத்து வேலப்ப விதியில் உள்ள ஆயிர நகர வைசிய திருமண மண்டபத்தில் எம்.யுவராஜா மாநில பொதுச் செயலாளர் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மருத்துவ மாணவர்களுக்கான நீட் நுழைவுத் தேர்வு கையேடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கு பெற்று பயன் பெற்றார்கள்.இந்தநிகழ்ச்சியில்தமிழ்மாநிலகாங்கிரஸ்கட்சியின்மாநிலபொதுச்செயலாளர் எம்.யுவராஜா தலைமையேற்று புத்தகங்களை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினர்களாக மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.டி. சந்திரசேகர் , மாநில துணைத் தலைவர் விடியல் எஸ். சேகர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மேலும் தமிழ் மாநில காங்கிரஸ் ஈரோடு மத்திய மாவட்ட இளைஞரணி தலைவர் கே.ரமேஷ் துணைத்தலைவர் மாயாவெங்கடேஷ் மற்றும் நிர்வாகிகள் அருண்குமார் மூத்த நிர்வாகிகள் சம்பத் ,வட்டாரத் தலைவர் புவனேஷ் ,உழவன் பிரகாஷ், சரவணன் சாரதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்



மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் (23.02.2026) மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில் சிறப்பு தீவிர திருத்தம் 2026 மதுரை மாவட்டத்தில் உள்ள 10 சட்ட தொகுதிகளுக்கும் இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்டார்.





ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் திமுக வடக்கு மாவட்ட அலுவலகத்தில் திமுக தலைவரும் , தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையை ஏற்று திமுக கூட்டணி கட்சியான 'தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின்' ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சுப்பிரமணியத்துடன் மாவட்ட பொருளாளர் ஜீவா சுப்பிரமணியம், மாவட்டஇளைஞர்அணிசெயலாளர்ராஜேஷ்,நம்பியூர்ஒன்றியசெயலாளர்பொன்னுசாமி, அந்தியூர் ஒன்றிய செயலாளர் சுதாகர், அம்மாபேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் சந்திரசேகர், சத்தி ஒன்றிய செயலாளர் சஜித், தூ.நாயக்கன்பாளைரம் ஒன்றிய செயலாளர் சண்முக மூர்த்தி, தூ.நாயக்கன்பாளையம் ஒன்றிய அவைத்தலைவர் கணக்கம்பாளையம் பழனிச்சாமி,தாளவாடி ஒன்றிய செயலாளர் பெரியசாமி, சத்தி நகர செயலாளர் கண்ணன், அத்தாணி விஜயகுமார், கெம்ப நாயக்கன் பாளையம் பேரூர் செயலாளர் கந்தசாமி, சத்தி ஒன்றிய பசுவபாளையம் சிவகுமார், சத்தி நகர ரொட்டி ஆறுமுகம், அமான், அரியப்பம்பாளையம் பாலசுப்பிரமணியம் மற்றும் தேமுதிக நிர்வாகிகள் ஈரோடு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் நல்லசிவத்திற்கு பொன்னாடை அணிவித்து மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள்.

## தேனிமாவட்ட நிர்வாகிகள் தேர்வு 2026 சட்டமன்ற வேட்பாளர் ஆய்வு குழு மற்றும் ஆலோசனைக்கூட்டம்

தேனி மாவட்டம் தேனியில் மாவட்ட காங்கிரஸ் புதிய நிர்வாகிகள் வர்த்தக பிரிவு தலைவர் சங்கரநாராயணன், மகளிர் அணி மாவட்ட மாவட்ட துணை தலைவர் சன்னாசி, தேனீ நகர பொருளாளர் சுதாகர்,



தேர்ந்தெடுக்கும் ஆலோசனைக் கூட்டம் தெய்வா கூட்டம் அரங்கில் நடைபெற்றது இந்தக் கூட்டத்திற்கு ஏ கோபிநாத், காங்கிரஸ் மாவட்ட தலைவர்தலைமைஏற்று பேசினார் இதில் முன்னாள் மாவட்ட தலைவர் முருகேசன், மாநில மருத்துவர் அணி தலைவர்டாக்டர்தியாகராஜன், தலைவர் கிருஷ்ண வேணி, மாவட்ட எஸ்சி எஸ்டி பிரிவு மாநில பொதுச் செயலாளர் இனியவன், இளைஞர் காங்கிரஸ்ராஜாமுகமது, மாவட்ட மாணவரணி அணி தலைவர் ஜாசிம், மாவட்ட ஓ பி எஸ் பிரிவு தலைவர் மைதீன், முன்னாள் மாவட்ட செயலாளர் சம்சுதீன், முன்னாள் மாவட்ட செயலாளர் ரத்தினசாமி, தேனி நகர செயலாளர் ராமச்சந்திரன், மற்றும் மாவட்ட நகர தலைவர்கள் வட்டார தலைவர்கள் மற்றும் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்களும் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

# யாராலும் சூரியனை மறைத்து விட முடியாது 2026 தேர்தலில் மீண்டும் உதிப்பது உதயசூரியந்தான்

## தூத்துக்குடியில் தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேச்சு




தூத்துக்குடியில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டம் சிதம்பரநகர் பேருந்து நிறுத்தம்அருகில்வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன்தலைமையில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன் பெரியசாமி, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், நிர்மல்ராஜ், சுரேஷ்குமார் ரவீந்திரன், மேகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்: ஒன்றிய அரசின் புள்ளி விவரம் சொல்கிறது பொருளாதார வளர்ச்சியில் 11.19 சதவீதம் வளர்ச்சி பெற்று தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இருக்கிறது. தொழில், தனிநபர் வருமானம் உயர்ந்துள்ளது. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலில் எண்ணிக்கை குறைந்து உள்ளது. கல்வியில் சிறந்து விளங்குகிறது. உழைக்கும் பெண்கள் அதிகம் இருப்பது தமிழ்நாட்டில் தான் அதிக அளவுஉயர்கல்விபெரும் பெண்கள் என்று அனைத்திலும் வளர்ச்சி அடைந்து இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகதமிழ்நாடு இருக்கிறது. தேர்தல் வந்த உடன் பாஜகவிற்கு தமிழ் மீது அதிக பாசம் வந்துவிட்டது. பிரதமர் மோடி எங்கு சென்றாலும் தமிழில் தான் பேசுகிறார் என்கிறார்கள் ஒரு திருக்குறளை மட்டும் படித்தால் போதுமா ஏனென்றால் தமிழ்நாட்டிற்கு தேர்தல் வருகிறது. கீழடியில் நடந்த அகழ்வாராய்ச்சியில் தமிழன் பழமை வாய்ந்தவன் என்ற ஆய்வு அறிக்கையை ஒன்றிய அரசுக்கு அனுப்பி உள்ளோம் அதை கிடப்பில் போட்டு வைத்துள்ளனர்.தமிழன்என்றஇனம் 3 ஆயிரம் ஆண்டிற்கு முன்பு இருந்த இனம் என்பதை சொல்ல மனமில்லாத மோடிக்கு திடீரென்று தமிழ் மீது பாசம் வருகிறது. புதிய கல்விக் கொள்கையை கொண்டு வருகின்றனர். இதில் நுழைவுத் தேர்வு என்று கொண்டு வந்து படிக்க முடியாது என்றாக்கி குலத்தொழிலுக்குமீண்டும் அனுப்புவது தான் இந்தத் திட்டம். இந்தியாவிலே நாம் 48 சதவிகிதம்.எதற்கு சொல்கிறார்கள் என்ன சொல்கிறார்கள் என்று புரியாமல் பாஜகவுடன் கூட்டணி வைத்துவிட்டார் டெல்லி அணி தான் இன்று எல்லாம் முடிவு செய்கின்றனர் இந்த தேர்தலில் நாம் முடிவு செய்ய வேண்டியது தமிழ்நாட்டை பாதுகாக்க வேண்டுமானால் தமிழ் மொழியை பாதுகாக்க வேண்டுமானால் கலாச்சாரம் பண்பாட்டை பாதுகாக்க வேண்டுமானால் வருகின்ற தேர்தலில் மீண்டும் தளபதியார் முதலமைச்சராக வேண்டும் இது காலத்தின் கட்டாயம் எவ்வளவு இடையூறு கொடுத்தாலும் எதிர்த்து நிற்பார் மக்களிடத்தில் நமது கூட்டணிக்கு நல்ல ஆதரவு இருக்கிறது ஏற்கனவே உள்ள கருத்துக்கணிப்புகள் எல்லாம் திமுக கூட்டணி வெற்றி பெறும் என்று கூறுகிறார்கள் நான்கரை ஆண்டுகாலம் உறங்கி கொண்டிருந்த பலர் இப்போது எழுந்து நடக்கிறார்கள்.எந்த கொம்பனாலும் சூரியனை மறைத்து விட முடியாது 2026 தேர்தலில் உதிப்பது உதயசூரியன்தான் இந்த தொகுதியில் புதிதாக மக்கள் நலன் கருதி 210 புதிய அமைக்கப்பட்டுள்ளது.மீண்டும்திமுக ஆட்சி அமைந்தபின் ரூ2000 உரிமைத்தொகை வழங்கப்படும். திமுக கூட்டணி வெற்றி பெறுவதற்கு அனைவரும் துணை நிற்க வேண்டும். என்று அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

மாநில பேச்சாளர்கள் கான்ஸ்டன் டைன் ரவீந்திரன், சரத்பாலா கோபிநாத் காமராஜ் இருதயராஜ் தமிழ்பிரியன் ஆனந்தன் உள்ளிட்டோர் பேசினார்கள்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் 6,71,742 ஆண் வாக்காளர்களும், 7,04,689 பெண் வாக்காளர்களும், 193 மூன்றாம் பாலினத்தவரும் என மொத்தம் 13,76,624 வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர்



தூத்துக்குடி மாவட்டத்தில் 2026–ஆம் ஆண்டுக்கான சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சியர் இளம்பகவத் இன்று இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்டார். இதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் மொத்தம் 13,76,624 வாக்காளர் இடம் பெற்றுள்ளனர்.

விளாத்திகுளம் தொகுதியில் 2,03,732 வாக்காளர்களும், தூத்துக்குடி தொகுதியில் 2,48,300 வாக்காளர்களும் உள்ளனர். திருச்செந்தூர் தொகுதியில் 2,30,702 நபர்களும், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் 2,12,885 நபர்களும் வாக்காளர்களாகப்பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஓட்டப்பிடாரம் (தனி) தொகுதியில் 2,40,988 வாக்காளர்களும், கோவில்பட்டி தொகுதியில் 2,40,017 வாக்காளர்களும் உள்ளனர். பெண் வாக்காளர்கள் அதிகம் ஒட்டுமொத்தமாக தூத்துக்குடி மாவட்டத்தில் 6,71,742 ஆண் வாக்காளர்களும்,7,04,689 பெண் வாக்காளர்களும், 193 மூன்றாம் பாலினத்தவரும் என மொத்தம் 13,76,624 வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். இதில் பாலின வாரியாகப் பார்க்கும்போது, பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விடக் கூடுதலாக உள்ளது. மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 6,78,752 பெண் வாக்காளர்களும், 6,49,224 ஆண் வாக்காளர்களும், 182 இதர பாலினத்தவரும் இடம் பெற்றுள்ளனர்.

1. விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் 97,273 ஆண்கள், 1,00,660 பெண்கள் 14 இதரர் என மொத்தம் 1,97,947 வாக்காளர்கள் உள்ளனர்.

2. தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் 1,15,136ஆண்கள்,1,21,263 பெண்கள் 62 இதரர் என மொத்தம் 2,36,461 வாக்காளர்கள் உள்ளனர்.

3. திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் 1,08,526ஆண்கள்,1,14,077 பெண்கள், 28 இதரர் என மொத்தம் 2,22,631 வாக்காளர்கள் உள்ளனர்.

4. ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற தொகுதியில் 1,02,364ஆண்கள் 1,04,688 பெண்கள், 2 இதரர் என மொத்தம் 2,07,054 வாக்காளர்கள் உள்ளனர்.

5. ஓட்டப்பிடாரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் 1,13,480ஆண்கள்,1,19,002 பெண்கள், 54இதரர் என மொத்தம் 2,32,536 வாக்காளர்கள் உள்ளனர்.

6. கோவில்பட்டி சட்டமன்ற தொகுதியில் 1,12,445ஆண்கள்,1,19,062 பெண்கள், 22 இதரர் என மொத்தம் 2,31,529 வாக்காளர்கள் உள்ளனர்.

தொகுதிகளின் வாரியாகப் பார்க்கையில், தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி 2,36,461 வாக்காளர்களுடன் மாவட்டத்தில் முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து ஓட்டப்பிடாரம் (தனி) தொகுதியில் 2,32,536 வாக்காளர்களும், 2,31,529 வாக்காளர்களும் உள்ளனர். திருச்செந்தூர் தொகுதியில் மொத்தம் 2,22,631 வாக்காளர்கள் உள்ள நிலையில், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் 2,07,054 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்திலேயே குறைந்தபட்சமாக விளாத்திகுளம் தொகுதியில் 1,97,947 வாக்காளர்கள் உள்ளனர்.

ஒவ்வொரு தொகுதியிலும் பெண்களின் ஆதிக்கமே அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக தூத்துக்குடி தொகுதியில் அதிகபட்சமாக 1,21,263 பெண் வாக்காளர்களும், ஓட்டப்பிடாரம் தொகுதியில் 54 இதர பாலினத்தவரும் உள்ளனர். ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் இதர பாலினத்தவர் எண்ணிக்கை மிகக் குறைவாக 2 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது.வாக்காளர் பட்டியல் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் அல்லது கருத்துக்கள் இருப்பின், அவற்றை வரும் 25-02-2026-க்குள் தெரிவிக்குமாறு பொதுமக்களும் அரசியல் கட்சியினரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று ஆட்சியர் தெரிவித்தார். முன்னதாக வாக்குச்சாவடி மறுவரையறை தொடர்பான திட்டங்கள் குறித்து அரசியல் கட்சிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## தூத்துக்குடியில் ரூ.30,000 கோடி மதிப்பில் புதிய கப்பல் கட்டும் தளம் அமைய உள்ளது மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்




வ.உ.சி கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகம், செயற்கை நுண்ணறிவுடன் கூடிய துறைமுக மெய்நிகர் மாதிரி செயலி உள்ளிட்ட 9 திட்டங்கள், ரூ.12 கோடி மதிப்பிலான 'கொற்கை' சுற்றுலாத் திட்டம், துறைமுக ரயில் சரக்குத் தள இணைப்புச் சாலை மேம்பாடு உள்ளிட்ட 21 புதிய திட்டங்களை தொடங்கிவைத்துதுறைமுகத்தின் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு அமைப்புகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியயதாவது: தமிழகத்தில் நெடுஞ்சாலை, ரயில்வே மற்றும் துறைமுக மேம்பாட்டிற்காக ரூ.3 லட்சம் கோடிக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.சாகர்மாலாமற்றும் அம்ரித் பாரத் திட்டங்களின் கீழ் துறைமுகங்களை ரயில்வேயுடன் இணைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் மட்டும் தற்போது ரூ.12,600 கோடி செலவில் 111 திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. தூத்துக்குடி துறைமுகத்தை நாட்டின் முதல் பசுமைத் துறைமுகமாக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.இதற்காக காற்றாலைமற்றும்சூரிய ஒளி மின் உற்பத்தித்திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்துறைமுகம் ஹைட்ரஜன் எரிசக்தி முனையமாக மேம்படுத்தப்பட உள்ளது.

தூத்துக்குடியில் ரூ.30,000 கோடி மதிப்பில் புதிய கப்பல் கட்டும் தளம் அமைய உள்ளது. ரூ.15,000 கோடி மதிப்பிலான வெளித்துறைமுக வளர்ச்சித் திட்டத்தின் மூலம், துறைமுகத்தின் ஆழம் 18 மீட்டராக அதிகரிக்கப்படும். இதனால் பெரிய கப்பல்கள் வந்து செல்ல வழிவகை ஏற்படும்.

"பிரதமரின் தொலைநோக்குப் பார்வையால், 2030–ஆம் ஆண்டிற்கான கடல்சார் வணிகத் திட்டம் மற்றும் 2047–ஆம் ஆண்டிற்கான மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வரும் 2030–ஆம் ஆண்டு இந்திய துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறன் 10,000 மில்லியன் டன்னாக அதிகரிக்கும். மேலும், 2070–ஆம் ஆண்டிற்குள் இந்தியா 'கார்பன் உமிழ்வற்ற' (Zero Carbon emission) நாடாக உருவெடுக்கும்," என்று அமைச்சர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாஜக தமிழகத் தலைவர் நயினார் நாகேந்திரன், வ.உ.சி. துறைமுக ஆணையத் தலைவர் சுஷாந்த் குமார் புரோஹித், துறைமுகச் செயலர் மோகன் குமார் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில், தேர்தல் பணிகளைக் கண்காணிக்க, சட்டமன்றத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுள்ளனர். இதில், ஈரோடு மாவட்டத்திற்கு தமிழக வெற்றிக் கழக தேர்தல் கண்காணிப்பாளராக முன்னாள் எம்.பி., சத்தியபாமா நியமிக்கப்பட்டுள்ளார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.02.2026) இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, ஈரோடு மாவட்டத்தில் 01.01.2026ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், 2026 (Special Intensive Revision SIR 2026) இறுதி வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.02.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.02.2026) வேளாண்மைத்துறை, தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் 2025 2026 அந்தியூர் அத்தாணி சாலை, நலம் மஹாலில், நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறு தானிய திருவிழா, கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடசலம் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (23.02.2026) வேளாண்மைத்துறை, தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் 2025 2026 அந்தியூர் அத்தாணி சாலை, நலம் மஹாலில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறு தானியதிருவிழாவில் கண்காட்சியினைதிறந்து வைத்து பார்வையிட்டார். உடன் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடசலம் உட்பட பலர் உள்ளனர்.



## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி
# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (23.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை வேலை. அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 352 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ் மாவட்ட சமூகநல அலுவலர் சண்முகவடிவு உட்பட அனைத்துத்துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சொல்லின் செல்வர் ஈ..வி.கே. சம்பத் 49வது நினைவுநாள் ஈரோட்டில் காங்கிரஸ் கட்சியினர் அஞ்சலி



தமிழ் மேடைகளில் தன் கணீர் குரலால் கொள்கை முழக்கமிட்ட 'சொல்லின் செல்வர்' ஈ.வி.கேசம்பத் ஐயா அவர்களின் 49-வது நினைவு நாளை முன்னிட்டு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் இன்று சிறப்பான முறையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைமை மற்றும் மரியாதை:

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள சம்பத் நகரில் அமைந்துள்ள அன்னாரதுதிருவுருவச்சிலைக்கு, ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ்கமிட்டிதலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமை தாங்கி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னிலை வகித்தவர்கள்:

இந்தநிகழ்விற்குமுன்னாள் மாவட்ட தலைவர் டி. திருச்செல்வம், மண்டலத்தலைவர்சூரம்பட்டி சாம்ராட் அசோக், மற்றும் ஈரோடு வட்டாரத் தலைவர் எம்.ஆர். நட்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

நிகழ்ச்சியில் திரளான காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

அதில் பங்கேற்றோர் விவரம்: முன்னாள் மாவட்ட தலைவர்: ஈ.ஆர். ராஜேந்திரன்

மாநில பொதுக்குழு உறுப்பினர்: எம். ஞானதீபம்

தொழிலாளர் காங்கிரஸ் (TCTU) மாநில துணைத்தலைவர் குளம் எம். ராஜேந்திரன், துணைத் தலைவர் சி. பாஸ்கர்ராஜ்.

பொதுச் செயலாளர்கள்: டி. கண்ணப்பன், இரா. கனகராஜன், வி.கே. சச்சிதானந்தம்.

முன்னாள் மாமன்ற உறுப்பினர்: கை. சுப்பிரமணியம் துறைச் சார்ந்த நிர்வாகிகள்: மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, ஈரோடு பாராளுமன்ற மகிளாகாங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர் ஆர். கிருஷ்ணவேணி, மாவட்ட காங்கிரஸ் சேவா தளம் துணைத் தலைவர் ராஜாஜிபுரம் பி. குமரேசன்.

மாவட்ட நிர்வாகிகள்: கே.ஜே. டிட்டோ, பெரியார் நகர் சூரஜ், விஜயராகவன்.

இளைஞர் காங்கிரஸ்: மாநகர் மாவட்ட பொதுச் செயலாளர் சிட்டி கல்கி.

மற்றும் ஏராளமான கட்சித் தொண்டர்கள் இந்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு சொல்லின் செல்வருக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினர்.





## கோவையில் மாநில அளவிலான
# சிலம்பம் போட்டியில் பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி மாணவர்கள் அசத்தல்

கோவையில் ஆல் ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன் சார்பில் மாநில அளவிலான சிலம்பம் போட்டி கோவை புதூர் பகுதியில் உள்ள V.L.P. ஜானகி அம்மாள் கலைக் கல்லுரியில் உள்ள உள் விளையாட்டுஅரங்கில்நடைபெற்றது இதில்பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுமார் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர் இப்போட்டியில் தொடுமுறை ஒற்றை கம்பு இரட்டை கம்பு தனித்திறமை ஆகிய விளையாட்டுகள் வயது அடிப்படையில் நடைபெற்றது இதில் உக்கடம் பகுதியில் உள்ள பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் மாணவர்கள் பர்ஹான்.அகிலன். அபூபக்கர்சித்திக்.சுலைமான்.சக்கீர்.அஸ்வாக்.பாசில் .இம்தியாஸ். தாஸின். ஆகியோர் தொடுமுறை. தனிதிறமை மற்றும் இரட்டை கம்பு ஆகியை போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவு கோப்பை வழங்கப்பட்டது மேலும் பெஸ்ட் வே மார்ஷியல் ஆர்ட்ஸ் அகாடமி தலைமை ஆசிரியர் மாஸ்டர் சிஹான் ஜெமிஷா அவர்கள் வாழ்த்தினார்.

# ஜிஎஸ்டி அலுவலர்கள் போல் நடித்து 1.5 கிலோ தங்கம் திருட்டு



சென்னை: ஜிஎஸ்டி அலுவலர்கள் போல் நடித்து ஒன்றரை கிலோ தங்க நகை பார்சல்களை திருடிச் சென்ற வழக்கில் தனியார் கூரியர் நிறுவன ஊழியர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சென்னை சௌகார்பேட்டை பெரியநாயக்கன் தெருவில் ராவல் சிங் (வயது 30) என்பவர் தனியார் கூரியர் நிறுவனம்நடத்திவருகிறார்.கடந்த6ஆம்தேதி காலை மீனம்பாக்கம் விமான நிலைய கார்கோவில் இவரது கூரியர் நிறுவனத்திற்கு பார்சல் ஒன்று வந்துள்ளது.

இதையடுத்து ராவல் சிங், அவரது கூரியர் நிறுவனத்தில்பணிபுரிந்துவரும்கோவாராம்மற்றும் அருகில் உள்ள மற்றொரு கூரியர் நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் ஜிதேந்தர் குமார் ஆகிய இருவரையும் விமான நிலையம் சென்று குறிப்பிட்ட பார்சலை பெற்று வருமாறு அனுப்பி வைத்துள்ளார். மேலும் அந்த பார்சலில் சுமார் ஒன்றரை கிலோ தங்க நகைகள் வந்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் பார்சலை பெற்று வர சென்ற கோவா ராம் மற்றும் ஜிதேந்தர் குமார் ஆகியோர் வெகு நேரமாகியும்திரும்பிவரவில்லை.மேலும்அவர்களது செல்போன்களை தொடர்பு கொண்ட போது ஸ்விட்ச் ஆப் என வந்துள்ளது. இதையடுத்து சிறிது நேரத்தில் கோவா ராம் என்பவர் ஆட்டோ ஓட்டுநர் ஒருவரின் செல்போனிலிருந்து ராவல் சிங்கை தொடர்பு கொண்டுள்ளார். மேலும் ஜிதேந்தர் குமாரின் நண்பர்கள் தங்க நகைகளுடன் சொந்த ஊரான ராஜஸ்தானுக்குச் சென்று தலைமறைவானதும் தெரிய வந்துள்ளது. இதையடுத்து 31 வயதான ஜிதேந்தர் குமார் மற்றும் அவரது நண்பர் தன்ராஜ் சர்மா (வயது 30) ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணைக்கு பின்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# விசைத்தறி ஜி.எஸ்.டி. சிக்கல்: அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன் ஆகியோரிடம் விசைத்தறியாளர்கள் மனு தீர்வு காண உறுதி

விசைத்தறி தொழிலில் ஜாப் ஒர்க் முறையில் துணி உற்பத்தி செய்பவர்களுக்கு ஜி எஸ் டி துறையிடமிருந்து அண்மைக்காலமாக ஐடிசி-04 தளத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பான புதிய நடைமுறைகள் மற்றும் 2018 முதல் அபராதத்துடன் கூடிய நோட்டீஸ்கள் வழங்கப்பட்டு வருவது விசைத்தறி உரிமையாளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள், ஈரோடு ஜிஎஸ்டி ஜாயிண்ட் கமிஷனரை சந்தித்து இத்தகைய நடைமுறைகள் தொழிலைவிட்டுவெளியேறும் நிலையை உருவாக்கும் என விளக்கினர். இதனைத் தொடர்ந்து, கடந்த சில நாட்களுக்கு முன் சென்னை சட்டமன்ற வளாகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி, திருச்செங்கோடு எம்.எல்.ஏ., ஈ.ஆர். ஈஸ்வரன் ஆகியோரை சந்தித்து இக்கட்டான சூழலை விவரித்தனர்.

மேலும், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் மற்றும் சு.முத்துசாமி, திருச்செங்கோடு சட்டமன்றஉறுப்பினர் ஈஸ்வரன் ஆகியோரிடம் கோரிக்கை வைத்ததையடுத்து, அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஏற்பாட்டில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களைச் சந்திக்க வாய்ப்பு உருவானதாக கூறப்படுகிறது. அன்றைய தினமே சட்டமன்றத்தில் இந்தச் சிக்கல் குறித்து ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ வலுவாகக் குரல் எழுப்பினார்.

தொடர்ந்து, அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் மற்றும் காந்தி ஆகியோர் முன்னிலையில் நிதி அமைச்சரிடம் கூட்டமைப்பு நிர்வாகிகள் விரிவான விளக்கம் அளித்தனர். பாதிப்புகளைக் கேட்டறிந்த நிதி அமைச்சர், உடனடியாக வணிகவரித் துறை ஆணையரிடம் பேசுவதாக உறுதியளித்தார்.



அதன் தொடர்ச்சியாக, வணிகவரித் துறை ஆணையரைச் சந்தித்த போது, நிதி அமைச்சர் ஏற்கனவே இது குறித்துத் தகவல் தெரிவித்துள்ளதை ஆணையர் உறுதிப்படுத்தினார் என கூறப்படுகிறது. மேலும், விசைத்தறி உரிமையாளர்களின் சிரமங்களைப் பரிசீலித்து உரியவிலக்கு அளிக்க நடவடிக்கை எடுப்பதாக ஆணையர் உறுதியளித்தார் எனவும் கூறப்படுகிறது.

இதற்கு வழிவகை செய்த அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் சு.முத்துசாமி, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் சட்டமன்றத்தில் குரல் எழுப்பிய எம்.எல்.ஏ ஈ.ஆர். ஈஸ்வரன் ஆகியோருக்கு தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பினர் தங்களது நன்றியினைத் தெரிவித்துள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.